**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 32/2021**

**Prosecution Witness 1 (LW1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராமராஜ் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | பரமசிவம் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2024

( 1, 2, 3, 9 எதிரிகள் ஆஜர் . 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. பிஎன்எஸ்எஸ் பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யபட்டு மனு அனுமதிக்கபட்டது. வழக்கறிஞர் ஆஜர்)

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

1, 2, மற்றும் 9 வது எ.த.கு.வி:

| | |
|---|---|
| கேள்வி | 21.02.2020 ந் தேதி என் தம்பியின் வீட்டில் சித்ராவும், எதிரி மகாராஜனும் இருந்தார்கள் என்றும் ,வெளியே போய் இருப்பதாகவும் சொன்னார்கள் என்ற விபரத்தை புகாரில் நீங்கள் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | காவல் நிலையத்திற்கு புகார் கொடுப்பதற்கு நான் அவர்களை அழைத்தேன் என்றும் , அவர்கள் கொடுக்க வேண்டாம் என்றும் சொன்னார்கள் என்ற விபரத்தை நீங்கள் புகாரில் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | இந்த வழக்கு சம்பந்தமாக ஆண்டிபட்டி நீதித்துறை நடுவரிடம் நீங்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |

| | |
|---|---|
| | .2. |
| கேள்வி | அந்த வாக்குமூலத்தில் என் தம்பி செல்லபாண்டி அடிக்கடி கேரளாவிற்கு கூலி வேலைக்கு செல்வது வழக்கம் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மெஜிஸ்திரேட்யிடம் கொடுத்த வாக்குமூலத்தில் செந்தில் என்ற வெள்ளை செந்தில், அன்புகணேஷ் (5 மற்றும் 6 வது எதிரிகள்) பெயர்களை குறிப்பிட்டு தேனி ராஜாலாட்ஜில் தங்கி இருப்பதாக அவர்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால்? |
| பதில் | ஞாபகமில்லை. |
| கேள்வி | அந்த வாக்குமூலத்தை நீங்கள் படித்து பார்த்தீர்களா அல்லது படித்து காண்பிக்கப்பட்டதா என்றால்? |
| பதில் | நீதிமன்றத்தில் படித்து சொன்னார்கள். |
| கேள்வி | உங்களுக்கு தமிழில் எழுத , படிக்க தெரியும் என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | அந்த வாக்குமூலம் அதசாஆ 2 ல் படித்து காண்பித்து சொன்னார்கள் என்ற பதிவு உள்ளதா என்றால் ? |
| பதில் | இல்லை. அவ்வாறு இல்லை. |
| கேள்வி | பட்டியல் சாட்சி 2 (அசா3) ஜோதி உங்கள் மனைவி ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | பட்டியல் சாட்சி 3 (அசா5) கங்காதேவி உங்கள் அக்கா என்றால்? |
| பதில் | சரிதான். என் உடன் பிறந்த அக்கா. |
| கேள்வி | சாட்சி ஈஸ்வரி (அசா4) மற்றும் சாட்சி செல்வி உங்களுடைய தங்கைகள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சாட்சி ராஜேந்திரன் இன்று நீதிமன்றம் வந்துள்ளாரா என்றால்? |
| பதில் | வந்துள்ளார். |
| கேள்வி | அவர் சாட்சி கங்காதேவியின் கணவர் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | சாட்சி சங்கர்பாபு சாட்சி ஈஸ்வரியின் கணவர் என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | சாட்சி ஜெயராஜின் அப்பாவும், உங்கள் அப்பாவும் அண்ணன் தம்பிகள் என்றால் ? |
| பதில் | சரிதான். |

| | |
|---|---|
| | .3. |
| கேள்வி | சாட்சி சுருளிவேல்ராஜ், சாட்சி சென்ராயன் ஆகியோர்களின் அப்பாக்கள் உங்கள் அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | சாட்சி அரவிந்தகிருஷ்ணன் , சாட்சி பிச்சைமணி ஆகியோர்கள் உங்களுக்கு வேண்டப்பட்டவர்கள் என்றால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | சாட்சி செல்வக்குமார் உங்களுக்கு நெருங்கிய உறவினர் என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | சாட்சி ஜெயக்கொடியின் அம்மாவும், உங்கள் அம்மாவும் அக்கா, தங்கைகள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இறந்து போன செல்லப்பாண்டிக்கும், சித்ராவிற்கும் சம்பவத்திற்கு முன்பாக, சுமார் 20 ஆண்டுகளுக்கு முன்பாக திருமணம் நடைபெற்றது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இரு வீட்டார்கள் சம்மதத்தின் பெயரில் தான் மேற்படி திருமணம் நடைபெற்றது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இறந்து போன செல்லப்பாண்டியும் , சித்ராவின் சந்தோசமான வாழ்க்கையில் அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த மூன்று பிள்ளைகளில் மூத்தவரின் பெயர் நவீன்குமார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அவர் மூளை நலம் பாதிக்கப்பட்டவர் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 2 வது பெண் பெயர் மாகலட்சுமி என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 3 வது பையன் பெயர் ராஜராஜசோழன் என்ற நந்தீஸ்குமார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இறந்து போன செல்லப்பாண்டிக்கும் , சித்ராவிற்கும் திருமணம் நடந்த போது நீங்கள் மேலப்பட்டியில் குடியிருந்தீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |

| | |
|---|---|
| | .4. |
| கேள்வி | மேலப்பட்டியில் இறந்து போன செல்லப்பாண்டிக்கும், உங்களுக்கும் பாத்தியப்பட்ட தென்னந்தோப்பு உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | உங்களுக்கு செல்லப்பாண்டியை தவிர , உங்கள் உடன் பிறந்த சகோதரர்கள் வேறு யாரும் உள்ளார்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | தென்னந்தோப்பை நீங்கள் பிரித்து கொண்டீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. அது அப்பா பெயரில் உள்ளது. |
| கேள்வி | தென்னந்தோப்பு பிரிப்பது சம்பந்தமாக உங்களுக்கும், செல்லப்பாண்டிக்கும் தகராறு ஆனது என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | இறந்து போன மேனேஜர் முத்துத்தேவர் உங்களுக்கு தெரியுமா என்றால் ? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | இறந்து போன மேனேஜர் முத்துத்தேவர் தலைமையில் தென்னந்தோப்பு சம்பந்தமாக பஞ்சாயத்து நடந்தது என்றும், அதில் பஞ்சாயத்தார்கள் உங்களை தென்னந்தோப்பை பிரித்து தர சொல்லியும் நீங்கள் கேட்காமல் , தென்னந்தோப்பு உங்களுக்கு பாத்தியது என்றும், இறந்து போன செல்லப்பாண்டிக்கு பிரித்து கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டீர்கள் என்றும், அதில் இருந்து இறந்து போன செல்லப்பாண்டிக்கும் , உங்களுக்கும் பேச்சு வார்த்தை கிடையாது என்று சொன்னால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | மேலப்பட்டியில் உங்களுக்கும் , செல்லப்பாண்டிக்கும் பாத்தியப்பட்ட பொது வீடு உள்ளதா என்றால்? |
| பதில் | உண்டு. |
| கேள்வி | இறந்து போன செல்லப்பாண்டியின் உடைய வீட்டியினுடைய பங்கை சாட்சி ஜெயராஜின் தம்பிற்கு ஒத்தி வைத்துள்ளார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இறந்த போன செல்லப்பாண்டி பைக் வைத்து இருந்தார் என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | அந்த பைக்கை அவருக்கு தெரியாமல் நீங்கள் விற்று விற்றீர்கள் என்று சொன்னால்? |
| பதில் | முற்றிலும் தவறு. |
| கேள்வி | நீங்கள் இருவரும் தனித்தனியாக கடமலைக்குண்டில் வீடு கட்டி வசித்து வந்தீர்கள் என்றால்? |

| | |
|---|---|
| பதில் | சரிதான். |
| கேள்வி | மேற்படி வீடு அரசு மருத்துவமனை வீதியில் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | செல்லப்பாண்டி வீட்டிற்கு மேற்கு பக்கமாக செல்வி, கே.பி.பாண்டியன் வீடு உள்ளது என்றால்? |
| பதில் | செல்லப்பாண்டியின் வீட்டிற்கு எதிரே உள்ளது. |
| கேள்வி | செல்லப்பாண்டியின் வீட்டிற்கு பக்கத்தில் ராஜா மனைவி செல்வி , ராசையா, சண்முகம், அழகர்ராஜா ஆகியோர்கள் வீடு உள்ளது என்றால் ? |
| பதில் | ராஜா வீடு தள்ளி உள்ளது. ராசையா வீடும் தள்ளி உள்ளது . மற்ற இருவர்கள் வீடு இருக்கிறதா என்று எனக்கு தெரியாது. |
| கேள்வி | 23.02.2020 ல் நீங்கள் கடமலைக்குண்டு காவல் நிலையத்திற்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் ? |
| பதில் | காலை 10.00 மணிக்கு சென்றேன். |
| கேள்வி | கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் ஆய்வாளர் அலுவலகம் மற்றும் சார்பு ஆய்வாளர் அலுவலகம் ஒரே காம்பவுண்டில் உள்ளதா என்றால்? |
| பதில் | ஆமாம். |
| கேள்வி | நீங்கள் 23.02.2020 ந் தேதி காலை 10.00 மணிக்கு மேற்படி காவல் நிலையத்திற்கு போய் முதன் முதலில் யாரை சந்தீர்கள் என்றால்? |
| பதில் | காவல் நிலையத்திற்கு போய் முதன் முதலில் ஆய்வாளரை சந்தித்தேன். |
| கேள்வி | அவரிடம் நீங்கள் உங்கள் தம்பி காணவில்லை என்ற விபரத்தை சொன்னீர்களா என்றால்? |
| பதில். | சொன்னேன். |
| கேள்வி | அவர் உங்களிடம் என்ன சொன்னார்கள் என்றால்? |
| பதில் | அவர் எழுத்து மூலமாக புகார் கொடுக்க சொன்னார். நான் எழுதி கொடுத்தேன். |
| கேள்வி | புகாரை யார் எழுதியது என்றால்? |
| பதில் | நான் தான் எழுதினேன். |
| கேள்வி | அந்த புகாரில் சாட்சி கையெழுத்து எதுவும் யார் போட்டார்களா என்றால் ? |
| பதில் | இல்லை. நான் மட்டும் தான் கையெழுத்து செய்தேன். |
| கேள்வி | உங்கள் உடன் காவல் நிலையத்திற்கு உறவினர்கள் யாரையும் அழைத்து சென்றீர்களா என்றால்? |
| பதில் | அழைத்து சென்றேன். |
| கேள்வி | அவர்களிடம் நீங்கள் சாட்சி கையெழுத்து போடும் படி ஏதும் கேட்டீர்களா என்றால்? |

| | |
|---|---|
| பதில் | கேட்கவில்லை. |
| கேள்வி | கடமலைக்குண்டில் கிராம நிர்வாக அதிகாரி உள்ளார் என்றால்? |
| பதில் | உள்ளார். |
| கேள்வி | உங்கள் தம்பி காணாமல் போன விசயத்தில் கடமலைக்குண்டில் இருக்கும் விஏஓ , மற்றும் ஊராட்சி மன்றத்தினர் போன்ற முக்கியஸ்தர்களிடம் தெரிவித்தீர்களா என்றால்? |
| பதில் | தெரிவிக்கவில்லை. |
| கேள்வி | நீங்கள் மயிலாடும்பாறைக்கு சென்றுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சென்றுள்ளேன். |
| கேள்வி | மயிலாடும்பாறைக்கு என்று தனி ஒரு கிராம நிர்வாக அலுவலர் உள்ளார் என்றால்? |
| பதில் | உண்டு. |
| கேள்வி | மயிலாடும்பாறை காவல் நிலையமும், கிராம நிர்வாக அலுவலகமும் பக்கத்தில் , பக்கத்தில் இருக்கிறது என்றால்? |
| பதில் | இருக்கலாம். |
| கேள்வி | மயிலாடும்பாறைக்கும், கடமலைக்குண்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால்? |
| பதில் | சுமார் 3 கி.மீட்டர். |
| கேள்வி | உங்கள் தம்பி செல்லப்பாண்டியின் மீது கடமலைக்குண்டு மற்றும் மயிலாடும்பாறை காவல் நிலையத்தில் பல்வேறு குற்ற வழக்குகள் பதிவு ஆகிது என்றால்? |
| பதில் | கடமலைக்குண்டு காவல்நிலையத்தில் பல வழக்குகள் உள்ளன. |
| கேள்வி | உங்கள் ஊர் கடமலைக்குண்டில் உன்னாம்மலை என்ற மருத்துவமனை உண்டு என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அது பக்கத்தில் மனமகிழ் மன்றம் என்ற கிளப் உள்ளது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் தம்பி அடிக்கடி மேற்படி கிளப்பிற்கு போய் சீட்டு ஆடுவார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்கள் தம்பி செல்லப்பாண்டி மது அருந்திவிட்டு, கிளப் காரர்களுடன் தகராறு செய்ததில் கிளப்காரர்கள் செல்லப்பாண்டியை அடித்து காயப்படுத்தியதில் வழக்கு ஏற்பட்டு உங்கள் தம்பி செல்லப்பாண்டி க.விலக்கு அரசு மருத்துவமனையில் 10, 20 நாட்கள் சிகிச்சையில் இருந்தார் என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அவ்வாறு சிகிச்சை பெற்றது இந்த வழக்கு சம்பவத்திற்கு 8 மாதத்திற்கு |

| | |
|---|---|
| | முன்னால் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | மேலப்பட்டியில் வகுத்தூர் மகாராஜன் என்பவர் இருக்கிறார் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அவருடைய மனைவியை உங்கள் தம்பி கையை பிடித்து இழுத்து , மானபங்கம் படுத்தியதாக ஆண்டிபட்டி நீதிமன்றத்தில் வழக்கு நடந்து கொண்டு இருந்தது என்றால்? |
| பதில் | சரிதான் |
| கேள்வி | கரட்டுபட்டி என்ற ஊர் கடமலைக்குண்டு பக்கத்தில் உள்ளது என்றால் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | கரட்டுபட்டியை சேர்ந்த முருகன் மனைவியை மானபங்கம் படுத்தியதாக உங்கள் தம்பி செல்லப்பாண்டி மீது வழக்கு நடந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் தொடர் குற்றவாளி பதிவேட்டில் உங்கள் தம்பி பெயர் உள்ளது என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | ஆண்டிபட்டியில் இராணி என்ற பெண்ணுடன் உங்கள் தம்பிக்கு தொடர்பு இருப்பதாக சொல்கிறார்கள் என்றால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | அந்த இராணியின் கணவர் ஒரு கொலை வழக்கு சம்பந்தமாக தண்டனை பெற்று மதுரை மத்திய சிறையில் இருந்தார் என்றால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | நீங்கள் புகார் கொடுப்பதற்கு முன்பாக உங்கள் தம்பி ஆண்டிபட்டி இராணியுடன் குடியிருந்தார் என்று சொன்னால்? |
| பதில் | அது பற்றி தெரியாது. |
| கேள்வி | இராணியின் கணவர் தண்டனை காலத்தை முடித்து வெளியே வந்தவுடன் அவருக்கும் , உங்கள் தம்பிக்கும் ராணி தொடர்பு சம்பந்தமாக தகராறு இருந்தது என்று சொன்னால்? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | நீங்கள் ராமநாதபுரம் , உச்சிபுள்ளிக்கு எத்தனாவது மாதம், எத்தனாவது தேதிக்கு எத்தனை மணிக்கு சென்றீர்கள் என்றால்? |
| பதில் | நேரம் ஞாபகமில்லை. தேதி 29.02.2020. |
| கேள்வி | உச்சிபுள்ளி பள்ளிவாசலில் இருந்து பிணம் தோண்டி எடுக்கபட்ட இடத்திற்கு நீங்கள் நேரடியாக சென்றீர்களா என்றால்? |

| | |
|---|---|
| பதில் | காவலர் ஒருவர் அழைத்து சென்றார். |
| கேள்வி | நீங்கள் எதில் அங்கு சென்றீர்கள் ? |
| பதில் | வேனில் சென்றேன். கடமலைக்குண்டு பகுதி வேன் மூலம் சென்றேன். ஓட்டுநர் பெயர் ஞாபகமில்லை. |
| கேள்வி | அங்கு அந்த பிணம் கிடந்த இடத்தில் இருந்தவர்கள் பெயர்கள் ஆய்வாளர் சொல்லி தான் உங்களுக்கு தெரியும் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | உங்களை ஆய்வாளர் எத்தனை முறை விசாரித்தார்? |
| பதில் | ஆய்வாளர் 2 முறை விசாரித்தார். |
| கேள்வி | 2 முறை ஆய்வாளர் விசாரித்த போது ஆய்வாளரால் பெயர்கள் சொல்லப்பட்ட நபர்களில் அங்க , அடையாளங்களை நீங்கள் ஏதும் குறிப்பிட்டு சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லவில்லை |
| கேள்வி | அந்த பிணம் கிடந்த இடத்தில் பெயர்கள் சொன்ன பின்னால் 2 ஆண்டுகள் கழித்து தான் இந்த நீதிமன்றத்தில் 29.06.2022 ல் உங்களை விசாரித்தார்கள் ? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | இந்த நீதிமன்றத்தில் உங்களை விசாரிப்பதற்கு முன்பாக நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்தது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அழைப்பாணையை போலீசார் சார்பு செய்து உங்களை அழைத்து சென்றார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அதன் பின்பு போலீசார் உங்களை காவல் நிலையம் வரச்சொன்னார்களா என்றால்? |
| பதில் | ஆம். அவர்கள் சாட்சி சொல்ல வரச்சொன்னார்கள். |
| கேள்வி | நீங்கள் காவல் நிலையம் சென்றீர்களா? |
| பதில் | சென்றேன். |
| கேள்வி | உங்கள் பெயரில் பதிந்த வாக்குமூலத்தை போலீசாரால் படித்து , அதன்படி நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொன்னார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | 1, 2, 9 எதிரிகள் தவிர மற்ற எதிரிகளின் பெயர்களை சொல்லி உங்களால் அடையாளம் காட்ட முடியுமா என்றால்? |
| பதில் | முடியாது. |
| கேள்வி | காவல் நிலையத்திற்கு புகார் கொடுக்க சென்ற போது செல்போன் வைத்து |

| | |
|---|---|
| | சென்றீர்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | புகாரில் உங்கள் கைபேசி எண்ணை ஏதும் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | இப்படிக்கு என்று சொல்லி புகாரில் நீங்கள் ஆங்கிலத்தில் கையெழுத்து செய்துள்ளீர்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அந்த புகார் அதசாஆ 1 ல் இப்படிக்கு என்ற வார்த்தைகளும், அதன் முன்பு உள்ள தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன் என்ற வார்த்தைகளுக்கும் இடையே நிறைய இடைவெளிகள் இருக்கிறது என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | புகாரை நீங்கள் எங்கு வைத்து தயார் செய்தீர்கள் என்றால்? |
| பதில் | காவல் நிலையத்தில் வைத்து. |
| கேள்வி | இந்த வழக்கில் நீங்கள் கொடுத்த புகார் தவிர்த்து நீங்கள் வேறு ஏதும் புகார் கொடுத்துள்ளீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | வெற்றுத்தாளில் உங்களிடம் கையெழுத்து வாங்கிவிட்டு போலீசார் அதில் நிரப்பிவிட்டார்கள் என்றாலும், கையெழுத்து வாங்கிய பேப்பரில் போலீசார் வார்த்தைகளை நிரப்பிவிட்டார்கள் என்றும் சொன்னால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | உங்கள் தம்பி செல்லப்பாண்டிக்கும், சித்ராவிற்கும் எந்த விரோதமும் இல்லை. நீங்கள் பொய்யாக பழி சுமத்துகீறிர்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | உங்களுக்கும் உங்கள் தம்பிக்கும் சொத்து பிரச்சனையில் விரோதம் உண்டு, அந்த விரோதத்தை வைத்து அவர் இறந்து விட்டதாக நினைத்து உங்கள் தம்பியின் சொத்துக்களை முழுமையாக அபகரிக்க வேண்டும் என்று உங்கள் உறவினர்களின் உடந்தையுடன் பொய் புகார் கொடுத்து போலீசாரை பயன்படுத்தி எதிரிகள் மீது பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் சொன்ன தேதியில், இந்த புகார் தயாரிக்கபடவில்லை , பின்னிட்டு இந்த வழக்கிற்காக தயார் செய்யபட்டுள்ளது என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லி கொடுத்து நீங்கள் பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |

| | |
|---|---|
| கேள்வி | 1வது எதிரி மகாராஜன் சொன்ன தேதியில் மயிலாடும்பாறை விஏஓவிடம் ஆஜராகவில்லை என்றும், அவரிடம் எந்த வாக்குமூலமும் 1வது எதிரி கொடுக்வில்லை என்றும், அதன் பேரில் போலீசார் உங்களை அழைக்கவில்லை என்றும் சொன்னால்? |
| பதில் | சரியல்ல. |

மேற்படி குறுக்கு விசாரணை மற்ற எதிரிகள் தரப்பிலும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது.

மறு விசாரணை இல்லை:

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.09.2024 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.09.09 10:04:21 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.09.2024.

**Illustration:1**

**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT & SESSIONS COURT, THENI.**

**Case No: SC 32/2021**

**Prosecution Witness 2 (LW2)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.ராஜேந்திரன் | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | வெள்ளையத்தேவன் | தொழில் | : | |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2024 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 06.09.2024

( 1, 2, 3, 9 எதிரிகள் ஆஜர் . 4, 5, 6, 7, 8 எதிரிகள் ஆஜரில்லை. பிஎன்எஸ்எஸ் பிரிவு 355 ன் கீழ் மனு தாக்கல் செய்யபட்டு மனு அனுமதிக்கபட்டது. வழக்கறிஞர் ஆஜர்)

(சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு ஆதார் அட்டை மற்றும் சம்பந்தப்பட்ட போலீசாரால் அடையாளம் காணப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டார்)

1, 2, மற்றும் 9 வது எ.த.கு.வி:

| | |
|---|---|
| கேள்வி | சம்பவத்திற்கு ஆறு மாதத்திற்கு முன்பு செல்லப்பாண்டிக்கும், சித்ராவுக்கும் குடும்பத்தில் பிரச்சனை இருப்பதாக சொல்லியுள்ளதை போலீசார் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன் |
| கேள்வி | 29.02.2020 ந் தேதி காலை 04.10 மணிக்கு அசா1 ராமராஜ் உங்களை கைபேசியில் தொடர்பு கொண்டார் என்ற விபரத்தை நீங்கள் போலீசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் ? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | போலீசார் விசாரிக்கும் போது 29.02.2020 ந் தேதி 04.00 மணியளவில் உங்கள் மனைவிக்கு போன் செய்து ராமராஜ் சொன்னார் என்ற விபரத்தை சொல்லியுள்ளீர்களா என்றால் ? |

| | |
|---|---|
| | .2. |
| பதில் | அவ்வாறு சொல்லவில்லை. என்னிடம் சொன்னதாக சொன்னேன். |
| கேள்வி | காவல் ஆய்வாளர் உங்களை உச்சிப்புளி பள்ளிவாசலில் இருந்து பனங்காட்டிற்கு அழைத்து சென்றார் என்று போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | தாசில்தார் இயந்திரத்தை கொண்டு வரச்சொல்லி அடையாளம் காட்டிய இடத்தை தோண்டினார். அழுகிய நிலையில் பிரேதம் ஒன்று இருந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால் ? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | மருத்துவர் ஆய்விற்கு தேவையான உடல்உறுப்புகளை எடுத்து கொண்டார் என்ற விபரத்தினை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | ராமராஜ் காவல் நிலையத்திற்கு புகார் கொடுத்த விபரம் உங்களுக்கு நேரடியாக தெரியுமா என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | உங்களை போலீசார் விசாரிக்கும் போது ராமராஜ் போலீஸ் ஸ்டேசனில் புகார் கொடுத்துள்ளார் என்ற விபரத்தை சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |
| கேள்வி | ராமராஜ் சொன்ன விசயமாக உங்கள் மனைவி சொல்லி நீங்கள் தெரிந்து கொண்டீர்களா என்றால் ? |
| பதில் | ஆம். |
| கேள்வி | உங்களை முதன் முதலில் இந்த வழக்கு போலீசார் உங்களை எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால்? |
| பதில் | ஒரே ஒரு முறை. |
| கேள்வி | அந்த ஒரே ஒரு முறை 29.02.2020 ந் தேதி ராமநாதபுரம் பனங்காட்டில் வைத்து விசாரித்தார்கள் என்றால்? |
| பதில் | சரிதான். |
| கேள்வி | அதன் பின் இந்த வழக்கு விசயமாக உங்களை போலீசார் விசாரித்தார்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் ராமராஜ் புகார் கொடுக்கும் போது காவல் நிலையம் போனதாக சொல்லியுள்ளீர்கள் . அதை போலீசார் விசாரணையில் சொல்லியுள்ளீர்களா என்றால்? |
| பதில் | சொல்லியுள்ளேன். |

| | |
|---|---|
| | .3. |
| கேள்வி | புகாரில் நீங்கள் சாட்சி கையெழுத்து ஏதும் போட்டீர்களா என்றால்? |
| பதில் | போடவில்லை. |
| கேள்வி | செல்லபாண்டி காணாமல் போன விபரத்தை போலீசார் விசாரிக்கும் வரையில் நீங்கள் வேறு யாரிடமும் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | சொல்லவில்லை. |
| கேள்வி | சம்பவ இடமான பனங்காட்டில் ஏற்கனவே ஜேசிபி இயந்திரம் இருந்ததா என்றால்? |
| பதில் | நாங்கள் சென்ற பிறகு தான் ஜேசிபி இயந்திரம் வந்தது. |
| கேள்வி | ஜேசிபி இயந்திரம் வந்த பிறகு தோண்ட எவ்வளவு நேரம் ஆனது? |
| பதில் | 10 நிமிடம். |
| கேள்வி | அந்த இடத்தில் மூன்று பேர்களுடைய பெயர்களை உங்களுக்கு போலீசார் சொன்னதற்கு பின்பு தெரியுமா என்றால் ? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | அதற்கு முன்பு அவர்களை பார்த்தது இல்லை என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | அவர்களுடைய அங்க அடையாளம் உயரம், பருமன், நிறம், ஆகியவை குறித்து போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால்? |
| பதில் | சொல்லவில்லை. |
| கேள்வி | நீங்கள் பார்த்த அந்த மூன்று பேரை அன்று பார்த்தற்கு பின்பாக இது நாள் வரை பார்க்கவில்லை என்றால்? |
| பதில் | பார்க்கவில்லை. |
| கேள்வி | செல்லப்பாண்டியின் பெயரில் பல வழக்குகள் இருப்பது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | ஆண்டிபட்டியில் உள்ள ராணியுடன் செல்லப்பாண்டி தொடர்பு வைத்து இருந்தார் என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால்? |
| பதில் | எனக்கு தெரியாது. |
| கேள்வி | செல்லப்பாண்டி , ராணியுடன் தொடர்பு வைத்து இருந்தார் என்பதனால் தான் செல்லப்பாண்டிக்கும் , ராணியின் கணவருக்கும் விரோதம் இருந்து வந்தது என்று சொன்னால் ? |
| பதில் | அது பற்றி எனக்கு தெரியாது. |
| கேள்வி | ராமராஜிற்கும், இறந்து போன செல்லப்பாண்டிக்கும் உள்ள பொது சொத்துக்கள் பிரிக்கபட்டுள்ளதா என்றால் ? |

| | .4. |
|---|---|
| பதில் | பிரிக்கப்படவில்லை. |
| கேள்வி | மேற்படி பாகப்பிரிவினை சம்பந்தமாக இறந்து போன செல்லப்பாண்டிக்கும், ராமராஜிற்கும் பஞ்சாயத்து பெரியோர்கள் மத்தியில் நடந்தது பற்றி உங்களுக்கு தெரியுமா என்றால்? |
| பதில் | தெரியாது. |
| கேள்வி | பஞ்சாயத்து நடந்தது , அதில் ராமராஜ் முழு சொத்து வேண்டும் என்று தகராறு செய்தார் என்றால் ? |
| பதில் | பஞ்சாயத்து நடக்கவே இல்லை. |
| கேள்வி | அந்த பஞ்சாயத்து நடந்தது ராமராஜிற்கும், செல்லப்பாண்டிக்கும் நடந்த பஞ்சாயத்தில் இருந்து இருவரும் பேசி கொள்ளமாட்டார்கள் என்றால்? |
| பதில் | பேசிக்கொள்வார்கள். |
| கேள்வி | ராமராஜ்ம், செல்லப்பாண்டியும் முன் விரோதம் கொண்டுள்ளார்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்களும், உங்கள் மனைவி, கொழுந்தியா ஆகியோர்களும் ராமராஜிற்கு ஆதரவாக முதலில் இருந்து செயல்பட்டு வருகீறிர்கள் என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் சம்பவ இடத்திற்கு போகும் போது அந்த மூன்று நபர்கள் பனங்காட்டில் இருந்தார்கள் என்றால்? |
| பதில் | இருந்தார்கள். |
| கேள்வி | எவ்வளவு நேரம் அங்கு இருந்தார்கள் என்றால்? |
| பதில் | எனக்கு தெரியாது. |
| கேள்வி | நீங்கள் பனங்காட்டிற்கு போய் சேரும் போது நேரம் என்ன? |
| பதில் | மதியம் 01.00 மணிக்கு பனங்காட்டிற்கு சென்றோம். சாட்சி தற்போது 03.00 மணி என்று சொன்னார். |
| கேள்வி | நீங்கள் சொன்ன மாதிரி காவல் நிலையத்திற்கு அசா1 உடன் நீங்கள் செல்லவில்லை என்றாலும், அதே போல் உச்சிப்புளி பனங்காட்டிற்கும் நீங்கள் போகவே இல்லை என்றும், அங்கே மூன்று நபர்களை பார்த்ததாக போலீசார் சொல்லி கொடுத்து இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால் ? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | நீங்கள் முதல் விசாரணையில் அளித்த சங்கதிகள் அனைத்தும் போலீசார் சொல்லி கொடுத்தும் , அசா1 ம் அதே போல் உங்களுக்கு சொல்லி கொடுத்தும், பொய் சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |

| | |
|---|---|
| | .5. |
| கேள்வி | புகார் எங்கு வைத்து எழுதப்பட்டது என்றால்? |
| பதில் | ராமராஜ் அசா1 ன் வீட்டில் வைத்து எழுதப்பட்டது. |
| கேள்வி | அப்படி எழுதும் போது அங்கு உங்களுடைய உறவினர்கள் அங்கு இ ருந்தார்களா என்றால்? |
| பதில் | ஆம். |
| கேள்வி | உங்கள் குடும்பத்தை தவிர்த்து அங்கு வேறு யாரும் இருந்தார்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நிறைய நாட்கள் செல்லப்பாண்டியை காணவில்லை என்பதால் உடனுக்கு உடன் காவல் நிலையம் சென்று புகார் கொடுக்க வேண்டும் என்று உங்கள் மனதில் பட்டதா என்றால்? |
| பதில் | என் மனதில் பட்டது. |
| கேள்வி | செல்லப்பாண்டி காணாமல் போன விசயமாக கிராம நிர்வாக அதிகாரியிடம் புகார் கொடுக்கலாம் என்ற சங்கதி உங்களுக்கு தெரியும் என்றால்? |
| பதில் | தெரியும். |
| கேள்வி | கடமலைக்குண்டு விஏஓவிடம் போய் புகார் கொடுக்க எதாவது முயற்சி செய்தீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | கடமலைக்குண்டு ஊர் நாட்டாமை, அதே மாதிரி ஊராட்சி மன்ற தலைவர் ஆகியோர்கள் இருக்கிறார்கள் என்றால்? |
| பதில் | இருக்கிறார்கள். |
| கேள்வி | அவர்களிடத்தில் செல்லப்பாண்டி காணாமல் போன விபரத்தை சொன்னீர்களா என்றால்? |
| பதில் | இல்லை. |
| கேள்வி | நீங்கள் முதல் விசாரணையில் சொன்னது போல் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், போலீசார் வேண்டியும், ராமராஜ் வேண்டியும் நீங்கள் பொய்யாக சாட்சியம் அளிக்கீறிர்கள் என்றால்? |
| பதில் | சரியல்ல. |
| கேள்வி | 23.02.2020ல் ராமராஜ் கடமலைக்குண்டு காவல் நிலையத்தில் எந்த புகார் கொடுக்கவில்லை என்றாலும், இந்த வழக்கில் சொல்லப்பட்ட புகார் பின்னிட்டு இந்த வழக்கிற்காக தயார் செய்யபட்டது என்றால் ? |
| பதில் | சரியல்ல. |

மறு விசாரணை இல்லை:

திதிறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 06.09.2024 அன்று வெள்ளிகிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

S GOPINATHAN

Digitally signed by S GOPINATHAN
Date: 2024.09.09 10:04:30 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
06.09.2024.